# நான் கண்ட தேசிய தினம்

சிங்கப்பூர் உலக வரைபடத்தில் ஒரு முற்றுப்புள்ளி. அது நாற்பது வருடங்களுக்கு முன் ஒரு சிறிய மீன்பிடிக் கிராமமாக இருந்தது. ஆனால், இன்றோ அது உலக மக்கள் தங்களின் மூக்கின் மேல் விரலை வைக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டது இதற்கு நம் முன்னோர்களே மூலகாரணமாவர். அன்று அவர்கள் எதிர்நீச்சல் போட்டியிராவிட்டால் இன்று சிங்கப்பூர் சிங்கநடை போட்டுக்கொண்டிருக்க முடியாது.

இன்று சிங்கப்பூர் சுதந்திரம் பெற்று நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. நம் நாட்டில் நாற்பதாவது தேசியதின விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதைவிடச் சிறப்பான ஒரு சம்பவம் அன்று நிகழ்ந்தது. அதுதான் பிரதமர் லீ சியான் லூங் கலந்து கொள்ளும் முதல் தேசிய தின நிகழ்ச்சி. இந்த இன்பமான நிகழ்வு நிச்சயமாக நமது பிரதமரைப் பூரிப்படையச் செய்திருக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. அதோடு, இந்த முறை தேசிய தினக் கொண்டாட்டம் சிங்கப்பூரில் கடந்த ஐந்து வருடங்களில் கொண்டாடப்பட்டதைவிடச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வருடம் தேசியதின அணிவகுப்பு மீண்டும் பாடாங் திடலக்குத் திரும்பியது. பாடாங் சிறியதாக இருந்தாலும் தேசிய தினக் குதூகலம் சிறிதளவும் குறையவில்லை.

முதலில் இசைக்குழுவினர் பல தேசிய கீதங்களைப் பாடி வந்திருந்தவர்களின் செவிகளுக்கு விருந்தளித்தனர். பிறகு தேசியதின அணிவகுப்பு முறையாக நடந்தேறியது. அணிவகுப்பில் கலந்துகொண்டவர்கள் சிங்கநடை போட்டுக்கொண்டு கம்பீரமாக நடந்து வந்தனர். அடுத்து, ஆடல் பாடல் எனப் பல அங்கங்கள் சிறப்பாக நடைபெற்று நம்மை வசீகரித்தன. தேசிய தினத்தின் கடைசி அங்கம் அனைவரும் மகிழும்வண்ணம் அமைந்தது. அதுதான் வாணவேடிக்கை. மக்கள் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்க, வாணவேடிக்கைகள் வானில் கோலமிட்டன. நிகழ்ச்சியின் இறுதியில் நம் பிரதமரும் அதிபரும் விடைபெற்றுக் கொண்டனர். நான் கூறியது நிகழ்ச்சியின் ஒரு பாதிதான். மற்றொரு பாதி அந்தப் பிரம்மாண்டமான கொண்டாட்டத்தைப் பார்த்தவர்களுக்குக் கிடைத்திருக்கும்.

சிங்கப்பூரர்களாகிய நாம் ஒன்று சேர்ந்து பல சாதனைகளைச் செய்திருக்கிறோம். இலட்சம் கனவுகள் கண்ணோடு, இலட்சியங்கள் நெஞ்சோடு இன்னும் பலவற்றைப் பல துறைகளில் நாம் சாதிக்க வேண்டும் என்பதே இவ்விழாவின் நோக்கமாகும். நம் சிங்கப்பூர், பல துறைகளில் சாதனைகள் புரிந்திருப்பது பல வெளிநாட்டினரை ஈர்த்துள்ளது. 'இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்'' என்று கூறுவதைப் போல நம் நாட்டின் முதுகெலும்பே நாம்தான். ஆகவே, நாமும் நம் முன்னோர்களைப் போல சாதனை புரிந்து வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும். இதுவே, நமது கடமையாகும். நாம் கடமை தவறாதவர்கள் என்று நிரூபிக்க வேண்டும். ஆகவே, ''வாழ்க்கைக் கவிதை வாசிப்போம், வானம் அளவு யோசிப்போம். முயற்சி என்ற ஒன்றை மட்டுமே மூச்சுபோல சுவாசித்துச் சாதிப்போம்.

பிரியதர்ஷினி
உயர்நிலை மூன்று உயர்தமிழ்
பயனியர் உயர்நிலைப் பள்ளி